# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

## DEPOSITION OF WITNESS

OS.NO.76/2017 and 75/2014

P.W.3- நடராஜன் த/பெ.கோவிந்தசாமி

DATE:22.02.2023

வா.சா.3 மீண்டும் அழைக்கப்பட்டு 2, 3 மற்றும் 9ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

அசல் வழக்கு எண்.76/2017 என்ற வழக்கில் முதல் பிரதிவாதி சுப்பிரமணி என்னுடைய சகோதரர் என்றால் என்னுடைய அண்ணன். நானும், அவரும் ராணுவத்தில் பணி புரிந்து வந்தோம் என்றால் சரி தான். என் அண்ணன் சுப்பிரமணி எந்த வருடம் ராணுவத்தில் இருந்த ஒய்வு பெற்றார் என்றால் 1975ல் ஒய்வு பெற்றார். அதே போன்று என்னுடைய மற்றொரு சகோதரர் உலகநாதன் என்பவரும் ராணுவத்தில் பணி புரிந்தார் என்றால் சரி தான். 1973-74 ஆண்டுகளில் சொத்து எதுவும் வாங்க வேண்டும்' என்றால் எங்களின் உயர் அதிகாரிடம் முன் அனுமதி எதுவும் பெற வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரி தான். வா.சா.ஆ.2 ஆவணம் மூலம் 16 சென்ட் நிலத்தை நவாஜ் ஜான் என்பவரிடம் இருந்து நான் கிரையம் பெற்றேன் என்றால் சரி தான். அந்த சமயத்தில் என் சகோதரர் சுப்பிரமணி ராணுவத்தில் இருந்து வந்திருந்தாரா என்றால் ஆமாம். நான் கிரையம் பெற்ற தேதியிலேயே முதல் பிரதிவாதியின் மனைவி ஜெகதாம்பாள் வா.சா.ஆ. 2 ஆவணம் மூலம் 16 சென்ட் நிலத்தை நவாஜ் ஜான் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றார் என்றால் சரி தான். முதல் பிரதிவாதியின் மனைவி ஜெகதாம்பள் அவரின் திருமணத்திற்கு பிறகு மாடுகளை வைத்து பால் கறந்து பால் வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. என் அப்பா கிரையம் பெற்ற சொத்தை நானும், என்னுடைய சகோதரர்களும் 1990ல் பாகபரிவினை செய்து கொண்டோம் என்றால் சரி தான். பாகபிரிவினை மூலம் எனக்கு வந்த சொத்துகளை யார் யாருக்கு விற்றேன் என்றால் 16 சென்ட் நிலத்தை முதல் பிரதிவாதிக்கு விற்றேன். 3வது பிரதிவாதி முருகனுக்குஎவ்வளவு சென்ட் நிலம் விற்றேன்

என்றால் 13 சென்ட் நிலம் விற்றேன். வேறு யாருக்கு விற்றேன் என்றால் வேறு யாருக்கும விற்கவில்லை. எனக்க எத்தனை குழந்தைகள் என்றால் 3 மகள்கள் 1 மகன். பாகரிபிரிவினை மூலம் வந்த சொத்தில் 14 1/2 சென்ட் நிலத்தை என்னுடைய மகனுக்கு செட்டில்மென்ட் எழுதி வைத்தேன் என்றால் சரி தான். பாகபிரிவினை மூலம் வந்த சொத்தை என்னுடைய சொந்த சொத்தாக கருதி நான் மற்றவர்களுக்கு விற்றேன் என்றால் சரி தான். எனக்கும், முதல் பிரதிவாதி குடும்பத்துக்கும் இடையே எவ்வளவு நாட்களாக பேச்சுவார்த்தை இல்லை என்றால் இப்போதும் பேச்சு வாத்தை உள்ளது. நான் விஸ்வநாதன், முருகன் ஆகியோர்களின் திருமணத்திற்கு நான் போகவில்லை என்றால் சரியல்ல. நான் விஸ்வநாதன், முருகன் ஆகியோர்களின் திருமணத்திற்கு அவர்கள் குடும்பத்துடன் எனக்கு பேச்சு வார்த்தை இல்லை என்பதால் நான் போகவில்லை என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே விஸ்வநாதனுக்கும், முருகனுக்கும் இடையே ஏற்பட்ட வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால சரி தான். அந்த வழக்கில் நான் விஸ்வநாதன் சார்பில் சாட்சியம் அளித்தேன் என்றால் சரி தான். அந்த வழக்கில' முருகனுக்கு எதிராக சாட்சியம் அளித்தேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் நான் கொடுத்த வாக்கமூலத்தின் சான்றிட்ட நகல் தான் தற்போது என்னிடம் காட்டபடுவது என்றால் சரி தான். அந்த வாக்கமூலத்தின் சான்றிட்ட நக்ல் பி.வா.சா.ஆ.1 ஆகும். ஜெகதாம்பாள் 1973ல் நவாப் ஜானிடம் கிரையம் பெற்ற சொத்தை வா.சா.ஆ.7 ஆவணம் மூலம் 3வது பிரதிவாதிக்கு செட்டில்மென்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரி தான். ஜெகதாம்பாள் நான் நவாப் ஜானிடம் இருந்து கிரையம் பெற்ற 14 1/2 சென்ட் நிலத்தை கிரையம் பெற்று அதனை வா.சா.ஆ.8 ஆவணம் மூலம் 4வது பிரதிவாதிக்கு செட்டில்மென்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரி தான். என்னுடைய குடும்பத்திற்கும் முதல் பிரதிவாதி குடும்பத்திற்கும் சுமார் 30 வருடங்களாக பேச்சு வார்த்தை இல்லை என்றாலும் விஸ்வநாதனுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஜெகதாம்பாள் கிரையம் பெற்ற சொத்துக்கள் அவரின் தனிப்பட்ட சொத்துகள் என்றாலும் கூட்டு குடும்ப சொத்து அல்ல என்றாலும் சரியல்ல. பாகபிரிவினை மூலம் வந்த சொத்து ஆகும். எனக்கும் முருகனுக்கும் இடையே பேச்சு வார்த்தை இல்லை என்பதால் நான் அவருக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

<u>பிரதிவாதிகள் 5 , 7 மற்றும் 8 தரப்பில் குறுக்கு விசாரணை</u>.

1990ல் பாகபிரிவினை பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாகஸ்தாரர்கள் அவர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தை சர்வ சுதந்திரமாக அனுபவித்து கொள்ள வேணடும் என்றம, அந்த சொத்துகளில் பாகஸ்தாரர்களின் வாரிசுகளுக்கு எந்த விதமான அக்கும் பாத்தியமும் பின்தொடாச்சியும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி தான். அதன்படி சகோதரர்கள் அனைவரும் அவர் அவர் பாக சொத்துகளை தனிதனியாக அனுபவித்து வந்தோம் என்றாலும் நான் சொல்வது போல் கூட்டாக எந்த காலத்திலும் அனுபவித்து வரவில்லை என்றால் சரியல்ல.

P REVATHY

Digitally signed by P REVATHY
DN: cn=P REVATHY, ou=VELLORE, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN

Additional District Judge(FTC),
Vellore.